# ஆண்டறிக்கை 2010

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை



www.condominium.lk














# ஆண்டறிக்கை

# 2010


## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை

1 ஆம் மாடி, தேசிய வீடமைப்புத் திணைக்கள கட்டிடம்,
சேர் சிற்றம்பலம் ஏ, கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 02
தொலை பேசி :- **24447429 / 2447432** பெக்ஸ்**: 2423606**
மின்னஞ்சல் **: cmastaff@sltnet.lk**

www.condominium.lk




# நோக்கு



நாட்டின் வீடமைப்பு தேவைகளுக்கான தீர்வெனும் வகையில் கூட்டாட்சிக் குடியிருப்புகள்

# அரும்பணி



கூட்டாட்சி ஆதனங்களைக் குடியிருப்பாளர்களின் நன்மை மற்றும் நலனோம்பலுடன் ஒத்துவரத்தக்க வகையில் நிர்மாணித்தல், அவ்வாதனங்களை முறையாக நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்யும் பொருட்டு முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவி ஆதனங்களைப் பராமரித்தல் ஆகிய பணிகளை ஒழுங்குறுத்துதல்.

## 1 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின்

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின்

அதிகாரசபையின் அதிகாரங்கள்

2010 ஆம் ஆண்டின் அதிகாரசபையின் ஒட்டுமொத்த செயற்பாடுகள

கூட்டாட்சி ஆதனங்களுக்கு சான்றிதழ் வழங்கல்

முகாமைத்துவ கூட்டுத்தாபனம் தாபிக்கப்படலும் முனைப்பாக்கலும்

கூட்டாட்சி ஆதனங்களின் பிணக்குகளை தீர்த்தல்

கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பாக அறிவுறுத்துதல்

இணைந்த வீட்டுரிமை சட்டத்திருத்தம்

தொழிற்பாடும் பராமரிப்பு நடவடிக்கைகளும்

மனித வள முகாமைத்துவ செயற்பாடுகள்

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை கூட்டங்கள

முழு தொழில்பாட்டினதும் மீளாய்வு

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் அபிவிருத்தி நடவடிக்கைகள்

மதிப்பீடு

## 2 கணக்குகளும் நிதியறிக்கையும்

## 3 கணக்காய்வு அறிக்கை

# கூட்டிணைந்த தகவல்கள்

## பெயர்

கூட்டு ஆதன முகாமைத்துவ சபை

## தாபிக்கப்பட்ட ஆண்டு

2003 ஆண்டு நவம்பர் மாதம் 10

**1973** ஆம் ஆண்டின் சட்ட இல 10
பொது வசதிகள் சபை (மீளாய்வு)
**2003** ஆம் ஆண்டின் சட்ட இல 24

## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

1 ஆம் மாடி, தேசிய வீடமைப்புத் திணைக்கள கட்டிடம்,
சேர் சிற்றம்பலம் ஏ, கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 02

## ள் தொலைபேசி / பெக்ஸ்

2447429 / 2447432
2423606

## மின்னஞ்சள் (ஈ - மெயில்)

cmastaff@sltnet.lk , it@condominium.lk

## இணையத்தளம் (வெப்)

www.condominium.lk

# பணிப்பாளர் சபை

01
சட்டத்தரணி கபில கமகே
தலைவர்
கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை

02
ஜீ.யூ.உபவன்ஷ
பொது முகாமையாளர்
கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை

03
சாந்தினி விஜேவர்த்தன
பணிப்பாளர்
தேசிய திட்டமிடல் திணைக்களம்
பொது திறைசேரி (திறைசேரி பிரதிநிதி)

04
நிஹால் பிரனாந்து
பொது பணிப்பாளர் நாயகம்
நகர அபிவிருத்தி சபை

05
கே.எல்.எல்.பிரேமநாத்
பொது முகாமையாளர்
தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்புச் சபை

06
பிரிகேடியர் ஏ.எல்.எஸ்.கே.பெரேரா
பொது முகாமையாளர்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

07
தமித குமாரசிங்ஹ
பொது பணிப்பாளர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

08
பத்ராணி ஜயவர்தன
நகர ஆணையாளர்
கொழும்பு மாநக சபை

09
சாந்தா பீ லியனகே
நகர ஆணையாளர்,
ஶ்ரீ ஜயவர்த்தனபுர - கோட்டே நகர சபை

10
கே.பீ.எவ்.தம்மிக்க நாமல் முதுகல
நகர ஆணையாளர்
தெஹிவளை – கல்கிச்சை மாநகர சபை

11
எச்.என்.எஸ்.அங்கம்மன
நகர ஆணையாளர்
மொரட்டுவ மாநாகர சபை

# கூட்டுத் திட்டம்
## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை



# பணிப்பாளர் சபையின் கட்டுப்பாட்டு அறிக்கை



பொது இயல்புகள் சபைச்சட்ட இல. 10, 1973 இன் கீழ் கொண்டமினியம் முகாமைத்துவ அதிகார சபை உருவாக்கப்பட்டது. பின்னர் பொது வசதிகள் சபைச் சட்ட இல. 24, 2003 இற்கு மாற்றப்பட்டது. முகாமைத்துவ நிர்வாகக் கட்டுப்பாட்டிற்கும், கொண்டமினியம் சொத்து, உப கொண்டமினியம் சொத்து, மாகாண கொண்டமினியம் சொத்து ஆகியவற்றை தன்பால் வைத்திருக்கவும் ஸ்தாபிக்கப்பட்ட சபை என சட்டப் பிரிவு 2இல் கூறப்பட்டுள்ளது. அதன்படி, கொண்டமினியம் முகாமைத்துவ அதிகார சபை சட்டப்படியான நிறுவனமாக 2003 ஆண்டு நவம்பர் மாதம் 10ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

# அதிகாரசபையின் நோக்கங்கள்

மேற்சொன்ன கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் 05 ஆம் வாசகத்துக்கமைய அதிகாரசபையின் நோகக்கங்களை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

(அ) கூட்டாட்சி ஆதனங்களின் அல்லது பகுதியளவு கூட்டாட்சி பிரிவுகள், கூட்டாட்சி பாகங்களினதும் பொது வசதிகளினதும் நிர்வாகம், முகாமைத்துவம், பராமரிப்பு மற்றும் நிர்வாகம்,

(ஆ) கூட்டாட்சி ஆதனங்கள் அல்லது பகுதியளவு கூட்டாட்சி ஆதனங்கள் பொது பயன்பாட்டு சாதனங்கள் மற்றும் பொது வசதிகளை உரிய முறையில் சிறப்பாக பராமரிக்கப்படுவதாக உறுதியளிப்பதும் மேற்படி ஆதனங்களை உரிய தரத்துடனும் சேவைக்கு ஈடுபடுத்தக்கூடிய வகையிலும் உரிய முறையிலும் பராமரிப்பதற்காக காலத்துக்கு காலம் திருத்த வேலை செய்வதாக உறுதியளிப்பதும் மேற்படி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்துக்கோ அல்லது உரிமையாளருக்கு குடியிருப்பாளர் ஒத்துழைப்பு வழங்குதல் இன்றேல் அச்செயற்பாடுகளை நிறைவேற்ற முகாமைத்துவ கூட்டுத்தாபனமோ அல்லது உரிமையாளரோ அல்லது உரிமையாளர்களோ அல்லது குடியிருப்பாளர்கள் தவறுகின்ற சந்தர்ப்பங்களில் அச்செயற்பாடுகளுக்கு நேரடியாக தலையீடு செயதல்,

(இ) தீயினால், மக்கள் கலகங்களினால், மற்றும் கிளர்ச்சி நிலைமைகளினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களுக்கு எதிராக கூட்டாட்சி பகுதிகள் இணையும் அனைத்து கட்டடங்களையும் காப்புறுதி செய்யுமாறோ அல்லது காப்புறுதியை செல்லுப்படியாகும் நிலையில் பேணுமாறு முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தினாலோ அல்லது உரிமையாளரினாலோ கோரும் பட்சத்தில் அவ்வாறு செய்வதாக உறுதியளிப்பதும் அதற்கான தவணைப்பணம் அல்லது வேறு கட்டணங்கள் தேவைக்கேற்ப முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திடமிருந்தோ அல்லது உரிமையாளரிடமிருந்து மீள அறவிட்டுக் கொள்ளுதல்,

(ஈ) கூட்டாட்சி ஆதனங்களின் பதிவுகள் கூட்டாட்சி அமைப்புப் படத்துக்கோ அல்லது பகுதியளவு கூட்டாட்சி ஆதனங்களின் பதிவுகள் பகுதியளவு கூட்டாட்சி அமைப்புப் படத்துக்கோ முரணாக ஏற்புடைய உரிமையாளர்களினாலோ அல்லது கூட்டாட்சி பகுதிகளில் குடியிருப்பாளர்களினாலோ அல்லது வேறெவரேனும் நபரினாலோ நிர்மாணிக்கப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து அனுமதியற்ற கட்டுமானங்களையும் அகற்றுதல்,

(உ) கூட்டாட்சி ஆதனத்தில் அல்லது பகுதியளவு கூட்டாட்சி ஆதனத்தில் முகாமைத்துவ கூட்டுத்தாபனம் உரிய முறையில் செயற்படுவதை உறுதி செய்தலும் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் நிர்வகித்தல்,

(ஊ) கூட்டாட்சி ஆதனங்கள் அல்லது பகுதியளவு கூட்டாட்சி ஆதனங்களின் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்துக்கு அல்லது உரிமையாளருக்கு உரிமையாளர்களுக்கு அல்லது குடியிருப்பாளர்களுக்கு நீர், கழிவுகள்,வடிகாலமைப்புகள், வாயு, மின்சாரம், கழிவகற்றல், வளிச்சீராக்கல், தொலைபேசி, வானொலி மற்றும் ரெடிபியுசன் போன்ற சேவைகளை வழங்குவதில் மேற்படி உரிமையாளருக்கு, உரிமையாளர்களுக்கு மற்றும் குடியிருப்பாளர்களுக்கு ஒத்துழைத்தல்,

(எ) கூட்டாட்சி பகுதிகளின் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் பயன் கருதி வீதிகள், நுழைவாயில்கள், பசுந்தரைகள்,பூங்கா,விளையாட்டு மைதானங்கள் மற்றும் வேறு திறந்த பொது

இடங்களை உருவாக்கி பராமரிப்பதற்கு ஒத்துழைத்தல் அல்லது அவ்வாறான வசதிகளை ஏற்படுத்துவதற்கும் பராமரிப்பதற்குமாக உள்ளூராட்சி நிறுவனமொன்றுக்கு கையளித்தல்,

(ஏ) கூட்டாட்சி ஆதனங்களின் அல்லது பகுதியளவு கூட்டாட்சி ஆதனங்களின் கூட்டாட்சி பகுதிகளில் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தினதோ அல்லது அவற்றின் உரிமையாளர்களினதோ அல்லது குடியிருப்பாளர்களின் கோரிக்கைக்கமைய மேற்படி பகுதிகளை பராமரித்தல், திருத்த வேலை சேவைகளை வழங்குதல்,

(ஐ) பங்கீடுபாட்டாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதை உறுதி செய்வதற்காக பதிவு செய்யப்பட்ட தற்காலிக கூட்டாட்சி ஆதன உருவாக்கத்தின் முன்னேற்றத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்படி உரிமைகளை பாதுகாப்பதற்கு தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதில் தலையீடு செய்தல்,

(ஒ) அரசினால் அங்கீகாரத்திற்காக முதலீட்டு திட்டங்கள் உள்ளடங்களாக கூட்டாட்சி ஆதனங்களை மீள அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களை வகுத்தல் மற்றும் அங்கீகாரத்திற்காக அமைச்சரிடம் சமர்ப்பித்தல்,

(ஓ) அரசினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களுள் கூட்டாட்சி ஆதனங்களை மீள அபிவிருத்தி செய்யும் கருத்திட்டங்களை செயற்படுத்தும் பணிகளை பொறுப்பேற்பதற்கோ அல்லது அக்கருத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு பொறுப்பேற்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடமோ அல்லது வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடமோ அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றிடமோ அல்லது அரசின் ஏதேனும் முகவராண்மையிடமோ அல்லது தனியார் அபிவிருத்தியாளரிடமோ கோரிக்கை விடுத்தல்,

(ஔ)ஏதேனும் பதிவு செய்யப்பட்ட பகுதியளவு கூட்டாட்சி அமைப்புப் படமொன்றிலோ அல்லது தற்காலிக கூட்டாட்சி அமைப்புப் படமொன்றிலோ காட்டப்படும் ஏதேனும் கூட்டாட்சி கட்டடமொன்று உரிமையாளரினால் பூர்த்தி செய்யப்படாமல் காணப்படுமிடத்து அதனை நிறைவுச் செய்யும் பொறுப்பை ஏற்றல்,

(ஃ) அதிகாரசபையின் நோக்கங்களில் ஏதேனும் நோக்கமொன்றை அடைவதற்காக காணி அபிவிருத்தி அல்லது மீள அபிவிருத்தி செய்தல்,

(க) மேற்சொன்ன அனைத்து நோக்கங்களையும் அல்லது அவற்றில் ஏதேனுமொரு நோக்கத்தை அடைவதற்குத் தேவையான அல்லது அனுகூலமான வேறு அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளல்.

மேற்சொன்ன நோக்கங்களை அடைவதற்காக சட்டத்தின் ஆறாவது வாசகத்தின் மூலம் அதிகாரசபைக்கு பல அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, அவற்றை பின்வருமாறு குறிப்பிடலாம்.

## 2.1 அதிகாரசபையின் அதிகாரங்கள்

கூட்டாட்சி ஆதனத்தின் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்துக்கும் அதன் உரிமையாளருக்கிடையே, உரிமையா-ளர் அல்லது குடியிருப்பாளருக்கிடையே, உரிமையாளர் அல்லது கொள்வனவாளருக்கிடையே ஏற்படக்கூடிய பிணக்குகளை தீர்த்தல்.

தற்காலிக கூட்டாட்சி ஆதனமொன்றை பரிசோதிப்பதற்கு அல்லது எந்தவொரு கூட்டாட்சி ஆதமொன்றின் பொது பிரிவுகள் பராமரிக்கப்படாமை அல்லது அனுமதியற்ற கட்டுமானங்களை அகற்றுவதற்கு அல்லது பரிசோதித்தல் அல்லது குறிப்பிட்ட ஆதனத்துக்குள் பிரவேசித்தல்

அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக கட்டணங்களை அறவிடல்.

கூட்டாட்சி ஆதனப்பகுதிகளின் பொது வசதிகளுக்கு அல்லது பாகங்களுக்கு உரிமையாளரினாலோ அல்லது வேறெவரேனும் ஒருவரினால் மேறகொள்ளப்பட்டுள்ள ஏதேனும் சேதங்களை சீராக்குவதற்கு செய்யப்பட்ட செலவுகளை குறித்த நபரிடமிருந்து அறிவிட்டுக்கொள்ளல்

# 3. 2010 ஆம் ஆண்டின் அதிகாரசபையின் ஒட்டுமொத்த செயற்பாடுகள்

கூட்டாட்சி ஆதனங்களை ஒழுங்குப்படுத்தும் அதிகாரம் பெற்ற நிறுவனம் என்ற ரீதியில் அதிகாரசபை வசமுள்ள அதிகாரங்களை அடிப்படையாக கொண்டு மீளாய்வு ஆண்டினுள் அதிகாரசபையினால் வினைத்திறனுடன் சேவையாற்ற முடிந்துள்ளது.

ஆனால் அதிகாரசபையினால் கட்டுப்படுத்தப்பட முடியாத பல காரணங்கள் இருந்தபோதிலும், 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானத்தில் வளரச்சியைக் காணக்கூடியதாக இருக்கின்றது. 2009 ஆம் ஆண்டில் புரள்வு 38.630 மில்லியன் ரூபாயாக இருந்துள்ள அதேவேளை, 2010 ஆம் ஆண்டில் அது 57.823 மில்லியன் ரூபாய் வரை வளர்ச்சியை காட்டி நிற்கின்றது. சான்றிதழ்கள் வழங்குவதன் மூலம் ஈட்டப்படும் வருமானமே அதிகாரசபையின் பிரதான வருமான மார்க்கமாக இருக்கின்ற அதேவேளை, 2010 ஆம் ஆண்டில் சான்றிதழ் வருமானமாக 46.4 மில்லியன் ரூபாய் மொத்த புரள்வுக்கு சேர்க்கப்பட்டுள்ளதென்பதை குறிப்பிட வேண்டும்.

குறிப்பிட்ட காலப்பகுதியின் மொத்த செலவு 57.780 மில்லியன் ரூபாயாக இருந்துள்ள அதேவேளை 2009 ஆம் ஆண்டின் செலவு 55.397 மில்லியன் ரூபாயாக இருந்துள்ளது.2009 ஆம் ஆண்டின் தேறிய பற்றாக்குறை 16.768 மில்லியன் ரூபாயாக இருந்துள்ள அதேவேளை 2010 ஆம் ஆண்டின் தேறிய மிகை 0.0027 மில்லியன் ரூபாயாகும்.

கூட்டாட்சி ஆதனத் துறையில் பின்வரும் சிக்கலான நிலைமையொன்று காணப்பட்ட நிலைமையிலேயே அதி-காரசபையானது கடந்த வருடத்துடன ஒபபீட்ளவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது

2009 ஆம் ஆண்டில் இலங்கையின் ஆதன நிறுவனங்களின் நிதி முகாமைத்துவம் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் வீழ்ச்சி நிலை தொடர்ந்தும் காணப்பட்டமை

வங்கி மற்றும் கடன் அளிக்கும் நிதி நிறுவனங்கள் கூட்டாட்சி ஆதனங்களுக்கு கடன் வழங்குவதை வரையறுத்திருந்தமை

அநேகமான கட்டுமான நிறுவனங்கள், நகர வீடமைப்புகளுக்கான கேள்வியை சரியான முறையில் மதிப்பீடு செய்யாத காரணத்தினால், அதி சொகுசு கட்டுமானங்களில் ஈடுபடல்

மேற்படி காரணங்களினால் கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிக்கும் நிறுவனங்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டன. ஆகவே அதி சொகுசு மற்றும் பகுதியளவு சொகுசு கட்டுமானங்களின் எண்ணிக்கை குறைந்ததுடன் கூட்டாட்சி ஆதன சான்றிதழ்களுக்கான கேள்வி முழு அளவில் வீழ்ச்சி கண்டது.

2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 66 ஆக இருந்த போதிலும் 10 கூறுகளை விஞ்சிய ஆதனங்களுக்காக சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சமர்ப்பிக்கபட்டிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 24 ஆக இருந்தது. இது மொத்த விண்ணப்பங்களின் 36 விழுக்காடுகளாகும்.

# 3.1 கூட்டாட்சி ஆதனங்களுக்கு சான்றிதழ் வழங்கல்

2003 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க இணைந்த வீட்டுரிமை (திருத்தங்கள்) சட்டத்தின் பிரகாரம் தற்காலிக கூட்டாட்சி ஆதனங்கள், பகுதியளவு கூட்டாட்சி ஆதனங்கள் மற்றும் முழுமையான கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பாக ஒழுங்குப்படுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கூட்டாட்சி கட்டடத்தின் குடியிருப்பாளர்களின் நன்மை மற்றும் நலனோம்புகை கருதி அமைக்கப்பட்டுள்ள பொது வசதிகள் தொடர்பாக திருப்தி கொள்ள முடியுமெனவும் பொதுப் பாவனை சாதனங்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக செயற்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் தொடர்பாக திருப்தி கொள்ள முடியுமெனவும் உறுதிப்படுத்திக்கொண்டு கட்டடத்தின் அபிவிருத்தியாளர்களுக்கு அதிகாரசபையின் சான்றிதழொன்று வழங்கப்பட வேண்டுமென கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இச்சான்றிதழை வழங்குவதற்கு முன்னதாக அதிகாரசபையினால் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசோதித்தல், பொறியியல் உதவியாளர்கள் மூலம் சம்பந்தப்பட்ட கட்டடடத்தின் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்துக்கமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளதா என பரிசோதிக்கப்படுகின்ற அதேவேளை, இறுதியில் கட்டடக் கலை நிபுணர்கள், கட்டமைப்பு பொறியியலாளர், உள்ளூராட்சி மன்றங்களின் அலுவலர்கள், தீயணைப்பு திணைக்களம், நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த தொழில்சார் தகைமைகளை கொண்ட குழுவொன்றின் விதப்புரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேற்படி சான்றிதழ்களை ஆதன அபிவிருத்தியாளருக்கு பின்வரும் சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

(அ) அமைப்புப்படத்திற்கான அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர், நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஆதனமொன்றுக்காக வழங்கப்படுவது தற்காலிக கூட்டாட்சி சான்றிதழாகும்.

(ஆ) மேற்சொன்னவாறு அங்கீகாரம் பெறப்பட்ட கட்டடமொன்றில் பகுதியளவில் குடியேறுவதற்கு பொருத்தமாக உள்ளதாக இணங்கற் சான்றிதழ் பெறப்பட்டதன் பின்னர் வழங்கப்படுவது பகுதியளவு கூட்டாட்சி சான்றிதழாகும்.

(இ) கட்டடமொன்றின் பணிகள் முழுமையாக நிறைவுச் செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்படும் சான்றிதழ் கூட்டாட்சி சான்றிதழாகும்.

| கூட்டாட்சி சான்றிதழ் வழங்கப்படல **2005-2010** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
| தற்காலிக கூட்டாட்சி சான்றிதழ்கள் | - | 04 | 11 | 04 | 05 | 01 |
| பகுதியளவு கூட்டாட்சி சான்றிதழ்கள் | - | 03 | 02 | 03 | 02 | 03 |
| முழு அளவிலான கூட்டாட்சி சான்றிதழ்கள் | 12 | 81 | 92 | 94 | 112 | 62 |
| | 12 | 88 | 105 | 101 | 119 | 66 |

2009 ஆம் ஆண்டில் சான்றிதழ்கள் வழங்கியதன் மூலம் 23.6 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ள அதேவேளை, 2010 ஆம் ஆண்டு அத்தொகை 46.4 மில்லியன் ரூபாயாக இருந்தது. 2009 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும் ஈட்டப்பட்ட வருமானம் குறைவடைந்தமைக்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சான்றிதழ் விண்ணப்பங்கள் குறைந்தளவிலான கூறுகளை கொண்டிருந்தமையாகும்.

## 3.2 முகாமைத்துவ கூட்டுத்தாபனம் தாபிக்கப்படலும் முனைப்பாக்கலும்

நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனத்தின் அமைப்புப்படத்தை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுச் செய்வதோடு மேற்படி ஆதனத்தில் முகாமைத்துவ கூட்டத்தாபனம் சட்ட ரீதியாக ஏற்படுகின்றது. அவ்வாறான ஆதனமொன்றை பதிவுச் செய்து 06 மாதங்களுக்குள் மேற்படி முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தின் முதலாவது அமர்வை கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையி-னால் கூட்டப்படல் வேண்டும். கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையைச் சேர்ந்த அலுவலர்கள் தொடர்ச்சியாக முகாமைத்துவ கூட்டுத்தாபனம் தாபித்தல் மற்றும் அவற்றின் வருடாந்த கூட்டங்களில் கலந்துக்கொள்கின்றனர். 2009.12.31 ஆம் திகதியளவில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையில் பதிவுச் செய்யப்பட்டிருந்த முகாமைத்துவ கூட்டுத்தானங்களின் எண்ணிக்கை 197 ஆகும். 2010 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அதன் எண்ணிக்கை 235 ஆக இருந்தது.

அதற்கு மேலதிகமாக சுனாமி பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களின் கூட்டாட்சி அமைப்புப்படங்கள் பதிவு செய்தல் மற்றும் உரித்துறுதிகள் வழங்கல் செயற்பாடுகள் தாமதமடைவதனால், அவற்றின் பொது வசதிகள் மற்றும் பொது பயன்பாட்டு சாதனங்களின் முகாமைத்துவத்துக்கும் நிர்வாகத்துக்குமான முகாமைத்துவம் தாபிக்கப்படும் வரை, முகாமைத்துவ குழுக்களை தாபிப்பதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரக-ாரம் இன்றளவில் அவ்வாறான 35 கூட்டாட்சி ஆதனங்களில் முகாமைத்துவ குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

மேலும், இதுவரை அரச மற்றும் தனியார் துறையினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆதனங்களின் கூட்டாட்சி அமைப்புபடம் பதிவுச் செய்யப்படாமையினாலோ அல்லது உறுதி பெற்றுக்கொள்ளப்படாமையினால் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் தாபிக்க முடியாது போன ஆதனங்களில் முகாமைத்துவ குழுக்கள் தாபிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை மிகக்குறைந்த பட்ச பெறுபேறுகளையே பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. அதாவது அரச துறையில் 11 குழுக்களும் தனியார் துறையில் 35 குழுக்களுமாக மொத்தம் 46 குழுக்களே கடந்த ஐந்தாண்டு காலத்தில் தாபிக்க முடிந்துள்ளது. ஆனால் 2010 ஆண்டில் மாத்திரம் 15 முகாமைத்துவ குழுக்களை தாபிக்க முடிந்துள்ளது.

முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் தாபிக்கும் செயற்பாட்டின் போது இவ்வருடத்திலும் பின்வரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டது.

ஆதன உரிமையாளர்களின் ஆதன பராமரிப்பு செயற்பாடுகளுக்கு முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தின் முக்கியத்துவம் தொடர்பான அறியாமை

அரச நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்பட்ட மாடி வீட்டுத் தொகுதிகளின் வதிவாளர்கள் முகாமைத்துவ கூட்டுத்தானங்கள் தாபிக்கப்படல் தொடர்பாக அக்கறையின்மை

தனியார் நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்படுகின்ற அநேகமான ஆதனங்களின் உரிமையாளர்கள் நிரந்தரமாக அவற்றுள் வதியாமை

இவற்றின் வதிவாளர்கள் வேலைப்பழு காரணத்திலோ, தன்னார்வ அடிப்படையில் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பணிகளில் ஈடுபடுவதில் காட்டும் தயக்கம்

பராமரிப்புக் கட்டணம் செலுத்துவதை தட்டிக்கழித்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் பணியாற்தொகுதியினருக்கு மற்றைய குடியிருப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்காமை

## 3.3 கூட்டாட்சி ஆதனங்களின் பிணக்குகளை தீர்த்தல்

கூட்டாட்சி ஆதனங்களின் முகாமைத்துவ மற்றும் அதன் கூட்டுத்தாபன உரிமையாளர், உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடையே, உரிமையாளர் அல்லது கொள்வனவு செய்த நபருக்கிடையே, ஏற்படக்கூடிய பிணக்குகளை தீர்க்கும் பொருட்டு தலையீடு செய்வதற்கு அதிகாரசபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இன்றளவில் மேற்படி பிணக்குகளை தீர்ப்பதற்காக விசாரணைக் குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. மேற்படி விசாரணைக் குழுவிடம் 2009 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முறைப்பாடுகளின் தன்மைக்கேற்ப அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு, விற்பனை உடன்படிக்கையொன்றின் மூலம் விற்கப்பட்டு சுமார் ஐந்தாண்டுகள் கடந்துள்ள நிலையிலும், கூட்டாட்சி அமைப்புப்படம் பதிவுச் செய்யப்பட முடியாத காரணத்தினால் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகள் வழங்கப்படாமை

அங்கீகரிக்கப்பட்ட கட்டட அமைப்புப்படத்துக்கு முரணாக கட்டுமானங்களை மேற்கொள்ளல். சில ஆதன அபிவிருத்தியாளர்கள் குறிப்பிட்ட சில மாடிகளுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு மேலும் சில மாடிகளை நிர்மாணித்து விற்பதனால் இணங்கற் சான்றிதழ் பெற முடியாமை

பொது பயன்பாட்டு சாதனங்கள் மற்றும் பொது வசதிகளை அங்கீகரிக்கப்பட்ட அமைப்புப்படத்துக்கேற்ப வழங்காமை
குடியிருப்பாளர்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்துக்கு மாதாந்த பராமரிப்புத் தொகை செலுத்தாமை
அனுமதியற்ற கட்டுமானங்களை மேற்கொள்ளல்

இவ்வாறான 120 இற்கு மேற்பட்ட முறைபாடுகளுக்கு 2010 ஆம் ஆண்டில் அதகாரசபை தீர்வுகளை வழங்கியுள்ள அதேவேளை, சில முறைபாடுகள் விசாரிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி செயற்பாடுகள் மூலம் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையானது கடந்த ஐந்தாண்டுகளில், அதிகாரசபை தாபிக்கப்படுவதற்கு ஏதுவான நோக்கங்களை அடையும் பொருட்டு சிறந்த பங்களிப்பினை வழங்கியுள்ளதென்பதை குறிப்பிட முடியும்.

## 3.4 கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பாக அறிவுறுத்துதல்

கூட்டாட்சி ஆதன சட்டம், திட்டமிடல், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையினரை அறிவுறுத்துவதற்காக நாம் மீளாய்வு ஆண்டில் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தியுள்ளோம்.

காலாண்டுக்கொருமுறை வெளியிடப்படும் கூட்டாட்சி சஞ்சிகையை வெளியிடல்.

"தேசத்துக்கு மகுடம்", உலக குடியிருப்புத் தினம் ஆகியவற்றை முன்னிட்டு நடாத்தப்பட்ட "முக்கால நோக்கு" (துன்கல் தெக்ம) உள்ளடங்களாக அரச கண்காட்சி போன்றவற்றில் கலந்து கொண்டு சம்பந்தப்பட்ட துறையினர், சுனாமி கூட்டாட்சி ஆதனங்களின் குடியிருப்பாளர்களுக்கு முகாமைத்துவ கூட்டுத்தாபன எண்ணக்கருவை அறிமுகப்படுத்தல் மற்றும் கணக்கு பேணப்படுதல் தொடர்பாக அறிவுறுத்தும் கருத்தரங்குகளை நடாத்துதல்.

## 3.5 இணைந்த வீட்டுரிமை சட்டத்திருத்தம்

2003 ஆம் ஆண்டிலிருந்து கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை செயல்படத் தொடங்கியதுடன் அச்சட்டத்துக்கேற்புடைய கூட்டாட்சி ஆதனங்களின் பிணக்குகளை தீர்த்துக்கொள்வதற்காக அநேகமான ஆதன உரிமையாளர்கள் முன்வந்தார்கள். மேற்படி நடவடிக்கைகளை முன்னெடுக்கையில் கூட்டாட்சி ஆதனங்களாக கருதப்படாத ஆனாலும் பல பொது வசதிகளுடன் கூடிய வீட்டு முறைமைகளின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக சட்ட வரம்பொன்று இல்லாமை உறுதியானமையினால் அவ்வாறான ஆதனங்களுக்கும் இச்சட்டத்தை ஏற்புடையதாக்கிக் கொள்ளும் வகையில் 1973 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க இணைந்த வீட்டுரிமை சட்டத்தில் திருத்தம்கொண்டு வருவதற்கு2010 ஆம் ஆண்டு பணிப்பாளர் சபை தீர்மானித்தது.
மேலும், கடந்த 08 ஆண்டுகளில் இத்துறையின் ஒழுங்குப்படுத்தல் பொறுப்பை நிறைவேற்றுகையில், 1973 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க மற்றும் 1973 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க இணைந்த வீட்டுரிமை சட்டம் மற்றும் பொது வசதிகள் சபை சட்டம் ஆகிய சட்டங்களில் இணங்காணப்பட்ட அத்தயாவசிய விடயங்களை உள்ளடக்கி இச்சட்ட திருத்தத்தை மேற்கொள்ளும் பொருட்டு ஆரம்ப நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 3.6 தொழிற்பாடும் பராமரிப்பு நடவடிக்கைகளும்

நீர்கொழும்பு, கம்பஹா ஆதார வைத்தியசாலைகளின் சாக்கடைத் தொகுதிகளின் பராமரிப்பு பணிகளும், மாதிவெல பாராளுமன்ற உத்தியோகபூர்வ விடுதிகளின் பராமரிப்பு பணிகளும் எமது அதிகாரசபை ஊழியர்களினால் ஆற்றப்படுகின்றது. மேலதிக ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட இத்தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு பணிகள் மூலம் 2010 ஆம் ஆண்டில் 6.8 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டது. அதற்கு மேலதிகமாக பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒப்பந்த பணிகள் மூலம் 0.86 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்ட முடிந்தது.

## 3.7 மனித வள முகாமைத்துவ செயற்பாடுகள் (ஊழியர்த்தொகையும் பிரச்சனைகளும்)

2006 30 இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் புதிய ஆட்சேர்ப்புகள் நடைமுறைக்கு 2010 ஏப்பிரல் மாதத்தில் திறைசேரி அங்கீகாரத்தை பெறமுடிந்தது. அதன்படி 2010 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்கு குறைப்பாடாக இருந்த நிறைவேற்றுத் தரத்திலான பதவிகள் சிலவற்றை பூர்த்தி செய்ய முடிந்துள்ளது.

| ஆகவே 2009 ஆண்டளவில் மொத்த பணியாற்தொகுதியினரின் கட்டமைப்பு பின்வருமாறு அமையப்பெற்றிருந்தது. | |
|---|---|
| நிறைவேற்று மற்றும் சிரேஷ்டதொழில்சார் அலுவலர்கள் | 18 |
| கனிஷ்ட நிறைவேற்று மற்றம் முகாமைத்துவ உதவியாளர், நிர்வாகி | 26 |
| பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத ஊழியர்கள் | 29 |
| பயிற்றப்படாத (அலுவலக உதவியாளர்கள் போன்றோர்) | 19 |
| மொத்தம் | 92 |

## 3.8 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை கூட்டங்கள்

2010 ஆம் ஆண்டில் 11 பணிப்பாளர் சபை கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

### கணக்காய்வு, முகாமைத்துவக்குழு கூட்டங்கள்

மீளாய்வு அண்டில் 11 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

## 3.9 முழு தொழில்பாட்டினதும் மீளாய்வு

அநேகமான சேவைகள் வழங்கல் சட்டத்தின் பிரகாரம் வாடிக்கையாளர்களுக்குமேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுங்குப்படுத்தற் செயற்பாடாக விளங்குகின்ற அதேவேளை அவற்றின் ஊடாக வருமானம் ஈட்டமுடியாது. இந்நிலைமையின் கீழ் செலவுகளை ஈடு செய்ய முடியாத சில சேவைகளை இடைநிறுத்தவும் நேரிட்டது. கூட்டாட்சி ஆதனங்களுக்காக புதிய ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தல், மீள அபிவிருத்தி செய்யக்கூடிய ஆதனங்களுக்காக கருத்திட்ட முன்மொழிவுகளை வகுத்தல், கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பான தரவு-களைக் களஞ்சியப்படுத்தல், அனுமதியற்ற கட்டுமானங்கள் தொடர்பான நடவடிக்கைகள், சட்டத்தில் இருக்கக்கூடிய சில விடயங்களுக்கு முரணாக செயல்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல், முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களின் பிரச்சனைகளை தீர்த்தல் மற்றும் அவற்றை முனைப்பாக்கல் போன்ற நோக்கங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை 2010 ஆம் ஆண்டில் காட்டக்கூடியதாக இருந்தது.

## 3.10 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் அபிவிருத்தி நடவடிக்கைகள்

கூட்டாட்சி ஆதன முகாமைத்துவம், பராமரிப்பு, கட்டுப்பாடு, நிர்வாகம் மற்றும் இத்துறைகள் சார்ந்த அனைத்து ஒழுக்குப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக மக்களை அறிவுறுத்துவதற்காக விடேமான நிகழ்ச்சித் திட்டமொன்று நிறுவனத்தினால் செயல்படுத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட துறையினருக்கு செயலமர்வுகள், கருத்தரங்குகள் நடாத்தப்படல், இலத்திரணியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்கள் காரணமாக குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைய முடிந்தது.

கூட்டாட்சி ஆதனங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் போதும், துறைச் சார்ந்த பிரச்சனைகள் மற்றும் பிணக்குளை தீர்க்கும் போதும், முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை முனைப்பாக்கும் போதும் விசே'டமாக நிறுவனம் அடைந்துள்ள முன்னேற்றம் குறிப்பிடத்தக்க மட்டத்தில் காணப்படுகின்றது. மீளாய்வு ஆண்டில் இப்பணிகளை முறைப்படுத்துவதற்காக நுகர்வாளர் சேவைகள், கூட்டாட்சி சான்றிதழ் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு ஆகிய பிரதான பிரிவுகளை மேலும் வினைத்திறனுடன் சேவைகளை ஆற்றும் வகையில் விரிவாக்குவதற்கும் ஒழுங்கு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் மற்றும் அபிவிருத்தியாளர்கள், குடியிருப்பாளர்கள் மற்றும் அபிவிருத்தியாளர்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அபிவிருத்தியாளர்கள் ஆகிய தரப்புகளுக்கிடையே ஏற்படக்கூடிய பிரச்சனைகளை தீர்ப்பதற்காக கூட்டாட்சி மேன்முறையீட்டு குழுவொன்றை தாபித்து அப்பிரச்சனைளை தீர்க்கும் பணிகளை விரைவுப்படுத்துவதற்கு 2010 ஆம் ஆண்டில் முடிந்துள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகாரசபை, கொழும்பு மாநகர சபை போன்ற நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்பட்ட மாடி வீட்டுத் திட்டங்களில் குறைந்த வருமானம் பெறுவோர்களே வசித்து வருகின்றனர். நீண்ட கால குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வசித்து வருகின்ற போதிலும், இக்காலக்கட்டத்தில் அரச நிறுவனங்களினால் பொது பராமரிப்பு பணிகளும் திருத்தப்பணிகளும் முன்னெடுக்கப்பட்டமையினால் ஆதனத்தின் உரிமையை பெற்ற பின்னரும் மேற்படி ஆதனங்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக அவற்றின் உரிமையாளர்கள் உதாசீனப் போக்கினையே காட்டுகின்றனர். ஆகவே, அரச துறையில் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை கட்டியெழுப்புவதில் அதிகாரசபையானது குறைந்தளவிலான முன்னேற்றத்தையே கண்டுள்ளது.அரச நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்பட்ட ஆதனங்களில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்கும் நோக்கில் பிரசார மற்றும் அறிவுறுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும்,அவ்விடயத்தில் இவ்வருடத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைய முடியாது போனதென்பதை குறிப்பிட வேண்டும். ஆனால், இந்நிலைமை தொடர்பாக அரசின் தீவிர கவனத்துக்கு கொண்டு வந்து நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபை முயற்சி செய்து வருகின்றது. எவ்வாறாயினும், இன்றளவில் அதிகாரசபையானது அரச மற்றும் தனியார் துறையின் கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பான துறைகளில் விசே'டமாக அத்தியாவசிய பணியினை ஆற்றும் நிறுவனமாக விளங்குகின்றது.

## மதிப்பீடு

வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சராக பணியாற்றிய திருமதி பேரியல் அ'ரப், முன்னாள் வீடமைப்பு அமைச்சர் கௌரவ கீதாஞ்சன குணவர்தன, நிர்மாண, பொறியியல் சேவைகள் அமைச்சர் கௌரவ விமல் வீரவங்ச, முன்னாள் அமைச்சு செயலாளர்களான திரு எஸ்.எம்.ஏ.எல்.குணதிலக, திரு நிஸ்சங்க விஜேரத்ன மற்றும் அமைச்சின் செயலா-ளர் திரு கோட்டாபய ஜயரத்ன உள்ளடங்களாக அமைச்சின் அனைத்து உத்தியோகத்தர்களும் மீளாய்வு வருடத்தில் எமது அதிகாரசபைக்கு சிறந்த வழிகாட்டல்களை வழங்கியிருந்தனர். மேலும், பணிப்பாளர் சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் சகல வாடிக்கையாளர்களுக்கும் நிறுவனத்தைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கியிருந்த ஒத்துழைப்புக்காக நன்றி தெரவிக்கின்றேன்.

சட்டத்தரணி கபில கமகே
தவிசாளர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

ஜீ.யு உபவங்ச
பொது முகாமையாளர், பணிப்பாளர் சபை செயலாளர்
கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

# கணக்குகளும் நிதியறிக்கையும்

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை

2010 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிக் கூற்று (ஐந்தொகை)

# கணக்குகளும் நிதியறிக்கையும்

## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை
## 2010 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிக் கூற்று (ஐந்தொகை)

| 2009 ரூபாய்மூ | ஆதனங்கள் | | | 2010 ரூபாய்மூ |
|---|---|---|---|---|
| | நடைமுறை அல்லாத ஆதனங்கள் | | | |
| | நிலையான ஆதனங்கள் | | | |
| 18,589,663 | ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | குறிப்பு 01 | | 14,507,617 |
| | முதலீடுகள் | | | |
| 5,995,530 | நீண்டகால மற்றும் குறுகிய கால முதலீடுகள் | குறிப்பு 02 | | 11,525,406 |
| 24,585,193 | | | | 26,033,023 |
| | நடைமுறை ஆதனங்கள் | | | |
| 413,836 | மொத்தம் | குறிப்பு 03 | 481,654 | |
| 18,699,525 | வியாபார கடன்பட்டோர், ஊழியர் கடன்கள் மற்றும் கிடைக்க வேணடிய நிலுவைகள் | குறிப்பு 04 | 22,351,712 | |
| 18,506 | இதர கிடைக்க வேண்டிய நிலுவைகள் | குறிப்பு 05 | 46,093 | |
| 280,603 | முன் கொடுப்பனவுகள் | குறிப்பு 06 | 81,684 | |
| 1,566,678 | நிதி மற்றும் நிதி சார்ந்த வகையினங்கள் | குறிப்பு 07 | 2,064,506 | 25,025,649 |
| 20,979,148 | | | | |
| 45,564,341 | முழு ஆதனங்கள் | | | 51,058,672 |
| | பொறுப்புகள் | | | |
| | நடைமுறை பொறுப்புகள் | | | |
| 3,958,340 | கொடுபட வேண்டியவை | Note 08 | 2,038,568 | |
| 2,050,757 | அட்டுறுசெலவுகள் | | 1,642,403 | |
| 31,012,187 | கடன்கொடுத்தோர் முற்பணங்கள் | Note 09 | 37,436,386 | |
| 21,412,213 | ஒதுக்கீடுகள் | Note 10 | 22,783,178 | |
| 58,433,497 | முழு பொறுப்புகள் | | | 63,900,535 |
| (12,869,156) | தேறிய ஆதனத்தின் கூட்டுத்தொகை | | | (12,841,863) |
| | தேறிய ஆதனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தல் | | | |
| 500,000 | அனுமதித்த மூலதனம் | | | 500,000 |
| 500,000 | அரசின் மூலதனம் | | | 500,000 |
| 2,500,000 | போனஸ் பங்குகள் | | | 2,500,000 |
| 3,000,000 | | | | 3,000,000 |
| | முழக் கூட்டுத்தொகை | | | |
| (37,135,282) | திரண்ட நிதி கடந்த வருடம் சம்பந்தமான செம்மையாக்கல்கள் | | (41,790,584) | |
| 12,112,934 | | | | |
| (41,790,584) | ஆண்டுக்கான (குறை) மிகை | | 27,293 | (41,763,291) |
| 22,308,765 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கீடு | | | 22,308,765 |
| 1,350,000 | பொதுவான ஒதுக்கீடு | | | 1,350,000 |
| 2,262,663 | மூலதன மாற்றல் | | | 2,262,663 |
| (12,869,156) | மொத்த தேறிய ஆதனங்கள் உரிமைப் பங்கு | | | (12,841,863) |

| கபில கமகே<br>தலைவர் | ஜீ யு உபவன்ச<br>பொது முகாமையாளர் | கே.எச்.ஏ உபாலி<br>பிரதி முகாமையாளர்(ப.நி) |
|---|---|---|

## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை
### 2010 சனவரி 01 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரையான நிதி நிலைமை சம்பந்தமான கூற்று (ஐந்தொகை)

| 2009 ரூபாய்மூ | | | 2010 ரூபாய்மூ |
|---|---|---|---|
| | வருமானம் | | |
| 33,457,137 | தொழில்பாட்டு வருமானம் | குறிப்பு 11 | 56,454,482 |
| 5,173,083 | தொழில்பாடல்லாத வருமானம் | Note 12 | 1,368,786 |
| 38,630,220 | | | 57,823,268 |
| | தொழில்டபாட்டுச் செலவுகள் | | |
| 38,286,951 | ஊழியர் சம்பளங்கள் | Note 13 | 38,176,122 |
| 767,177 | .பிரயாணச் செலவுகள் | | 677,516 |
| 2,812,695 | விநியோகம் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | Note 14 | 3,154,536 |
| 2,883,166 | பராமரிப்புச் செலவுகள் | Note 15 | 4,762,910 |
| 3,415,191 | ஒப்பநதச் சேவைகள் | Note 16 | 3,070,535 |
| 5,011,697 | பெறுமானத் தேய்வு | | 5,145,209 |
| 53,176,877 | மொத்த தொழில்பாட்டு செலவுகள் | | 54,986,828 |
| (14,546,657) | தொழில்பாட்டு நடவடிக்கை மீதான மிகை (குறை) | | 2,836,440 |
| 842,598 | கருத்திட்ட செலவுகள் நேரடிச் செலவுகள் | Note 17 | 591,860 |
| 1,018,952 | நிதிச் செலவுகள் | Note 18 | 1,358,539 |
| 360,029 | தொழிபாடல்லாத செலவுகள் | | 844,053 |
| 2,221,579 | மொத்த தொழில்பாடல்லாத செலவுகள் | | 2,794,452 |
| (16,768,236) | வரி விதிப்புக்கு முன் தேறிய மிகை (குறை) | | 41,988 |
| | வருமான வரிக்கான ஏற்பாடு | | 14,695 |
| (16,768,236) | தேறிய மிகை (குறை) | | 27,293 |
| (37,135,282) | முன்னைய வருடத்திலிருந்து முன் கொண்டு வந்த மிகை (குறை) | | (41,790,584) |
| (53,903,518) | | | (41,763,291) |
| | முன்னைய வருட செம்மையாக்கல் | | |
| 431,510 | மொத்த வரவுத் தொகை | | - |
| 12,544,444 | மொத்த செலவுத் தொகை | | - |
| (41,790,584) | | | (41,763,291) |

# கணக்குகளுக்கான குறிப்புகள்

**1.** நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான முகாமையின் பொறுப்பு.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்பவும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கேற்பவும், பொருத்தமான கணக்கீட்டு கொள்கை தெரிவு மூலமும் விடயத்துக்கேற்ப நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இவ் நிதிக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மோசடி அல்லது தவறுகள்களினால் ஏற்படக்கூடிய பொருண்மையான பிரள்வுகளற்ற முறையான உள்ளக நிர்வாகமொன்றை திட்டமிட்டு அதனை செயற்படுத்துதல் அல்லது பேணுவதன் மூலம் நியாயமாக நிதிக் கூற்றுகளை சமர்ப்பிப்பபதற்கும் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதை உறுதிபடுத்துகின்றோம்

**2.** கணக்கீட்டுக் கொள்கைகள்

அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கேற்ப அந்தந்த காலப்பகுதியிடையே தொடர்ச்சியை பேணி வரலாற்று ரீதியிலான பெறுமதி அடி ப்படையில் அதிகார சபையின் கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நிதிக் கொள்கைகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பணவீக்க காரணிகள் அடிப்படையிலான சீராக்கல்களை மேற்கொள்ள முடியுமென்பதுடன் திரண்ட அடிப்படையில் கணக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3.**நிலையான சொத்துக்கள்

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25% |
| அலுவலக தளபாடங்களும் பொருந்திகளும் | 20% |
| அலுவலக உபகரணங்கள் | 20% |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 20% |
| கட்டிடங்கள் | 4% |

**4.** பணிக்கொடை

குறைந்த பட்சம் 05 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய பெறுமதிகளுக்கு கணக்குகளில் ஒதுக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.2010 திசெம்பர் மாதம் முடிவுற்ற ஆணடுக்கான மேற்படி பெறுமதி 17,282,147.50 ரூபாய் ஆகும்

**5.** இருப்பு

கணக்குகளின் சாதாரண அடிப்படையில் இருப்புகள் பெறுமதியிடப்பட்டுள்ளன. இலாபம் இருப்பில் சேர்க்கப்படவில்லை.

**6.**வருமானம்
இலாப நட்டக்கணக்கு மொத்த வருமானத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**7.**அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் ஒதுக்கல்

வருட இறுதியில் காணப்படும் வர்த்தக கடன்பட்டோர் நிலுவைகளில் வயது அடிப்படையில் 04 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் பெறுமதிகள் அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக் கடன்களாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.

**8.** சட்ட நடவடிக்கைகள்
லங்கா கெட் (தனியார்) நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள 807,187.50 ரூபாய் தொகையை அறவிட்டுக் கொள்ளும் பொருட்டு 53429 எம்.ஆர் ஆம் இலக்கத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது

## குறிப்பு 01

| | ஆதனம், பொறி,உபகரணம் | 2010,01.01திகதிக்கு புரள்வு | வருட சுவீகரிப்புகள் | வருட அப்புறப்படுத்தல்கள் | 2010.12.31 திகதிக்கு புரள்வு |
|---|---|---|---|---|---|
| 1,520,000 | கதிர்காம சுற்றுலா பங்களா காணி | 1,520,000 | - | - | 1,520,000 |
| 6,700,000 | கதிர்காம சுற்றுலா பங்களா கட்டடம் | 6,700,000 | - | - | 6,700,000 |
| 1,497,457 | அலுவலகத் தளபாடங்களும் பொருத்திகளும் | 1,497,456 | 330,429 | - | 1,827,885 |
| 16,650,000 | மோட்டார் வாகனங்கள் | 16,650,000 | 90,000.00 | - | 16,740,00 |
| 1,682,782 | இயந்திரங்கள், கருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,682,782 | 642,734 | - | 23,625,516 |
| 28,050,239 | | 28,050,2038 | 1,063,163 | | 29,113,402 |

| | கழிக்க,பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடு | 2010.01.01 திகதிக்கு தேய்மான ஏற்பாடுகள் | வருட தேய்மான ஏற்பாடுகள் | அப்புறப்படுத்தல்கள் | 2010.12 .31 திகதிக்கு தேய்மானம் |
|---|---|---|---|---|---|
| 536,000 | கதிர்காமம் சுற்றுலா பங்களா கட்டடம் | 536.000 | 268,000 | - | 804,000 |
| 568,495 | அலுவலகத் தளபாடங்களும் பொருத்திகளும் | 568,495 | 314,816 | - | 883,310 |
| 7,901,042 | மோட்டார் வாகனங்கள் | 7,901,042 | 4,177,500 | - | 12,078,542 |
| 455,039 | இயந்திரங்கள், கருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 455,039 | 384,893 | - | 839,933 |
| 18,589,663 | | 18,589,663 | 5,145,209 | | 14,605,785 |
| | 2010 12 31 ஆம் திகதிக்கு நீக்கப்பட்ட பெ-றுமதிகள் | | | | 14,507,617 |

## முதலீடுகள் — குறிப்பு 02

| | | |
|---|---|---|
| 3,000,000 | நீண்ட கால முதலீடுகள் - வங்கியின் பங்குகள் | 3,000,000 |
| 2,995,530 | குறுகிய கால முதலீடுகள் | 758,506 |
| | எட்மன்டன் அரசாங்க வீடமைப்பு திட்டத்தில கடன்தீர் நிதி முதலீடு | 6,751,832 |
| | பணிக்கொடை ஒதுக்கல் முதலீடு | 1,015,068 |
| 5,995,530 | | 11,525,406 |

## இருப்புக் கணக்குகள் — குறிப்பு 03

| | | |
|---|---|---|
| 161,611 | தொழில்பாட்டுப் பிரிவின் இருப்பு | 136,054 |
| 252,225 | தலைமை அலுவலக இருப்பு. | 82,319 |
| 240,403 | அலுவலக விநியோக இருப்பு | 263,281 |
| 654,239 | | 481,654 |

## வியாபார கடன்கள் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைவ் — குறிப்பு 04

| | | | |
|---|---|---|---|
| 221,599 | வியாபார கடன்கள் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைவ் | அட்டவணை 01 | 250,134 |
| 13,096,232 | வாடிக்கையாளர் கடன்கள் | அட்டவணை 02 | 18,558,155 |
| 4,195,907 | பணியாற்றொகுதி கடன்களும் முற்பணங்களும | அட்டவணை 03 | 3,156,503 |
| 1,185,787 | மொபலைசேசன் முற்பணங்கள் | அட்டவணை 04 | 386,920 |
| 18,699,525 | | | 22,351,712 |

## ஏனைய கிடைக்க வேண்டியவை — குறிப்பு 05

| | | |
|---|---|---|
| 18,506 | நிறுத்தி வைத்தல் வட்டி | 46,093 |
| 18,506 | | 46,093 |

| | முன்கொடுப்பனவுகள் | | குறிப்பு 06 |
|---|---|---|---|
| - | எரிபொருள் கொடுப்பனவுகள் | | 42,000 |
| 40,200 | வாகன பதிவு கட்டணங்கள் | | 39,684 |
| 40,200 | | | 81,684 |

| | காசும் காசுக்கு சமமானவையும் | | குறிப்பு 07 |
|---|---|---|---|
| 1,566,678 | வங்கி வைப்புகளும் கையிருப்புகளும் | அட்டவணை 05 | 2,064,506 |
| 1,566,678 | | | 2,064,506 |

| | கொடுபட வேண்டியவை | | குறிப்பு 08 |
|---|---|---|---|
| 935,130 | அலுவலக வாடகை | | - |
| 1,330,215 | ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுபட வேண்டியவை | | 421,477 |
| 440,038 | அட்டுறு பொறுப்புகள் | அட்டவணை 06 | 455,229 |
| 600,400 | விநியோக கொடுப்பனவு | | 499,514 |
| 347,531 | நிறுத்தி வைக்கப்பட்ட பணம் | | 266,432 |
| 107,900 | மீள செலுத்த வேணடிய கேள்வி கொடுப்பனவு | | 95,000 |
| 197,126 | பாதுகாப்பு வைப்புகள் | அட்டவணை 07 | 300,917 |
| 3,958,340 | | | 2,038,568 |

| | கடன் கொடுத்தோர் முற்பணம் | | குறிப்பு 09 |
|---|---|---|---|
| 3,567,284 | .வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற முற்பணம் | அட்டவணை 08 | 2,671,307 |
| 27,444,903 | நாணாவித | அட்டவணை 09 | 34,765,079 |
| 31,012,187 | | | 37,436,386 |

| | ஒதுக்கீடுகள் | | குறிப்பு 10 |
|---|---|---|---|
| 1,490,639 | கணக்காய்வு கட்டணங்களுக்கான ஏற்பாடுகள் | | 1,765,639 |
| 16,216,948 | பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | | 17,282,147 |
| 156,673 | பணியாளர் நட்டஈட்டுக்கான ஒதுக்கீடுகள் | | 156,673 |
| 3,379,076 | அ.மு. கடன் மற்றும் ஐயக்கடனுக்கான ஒதுக்கீடுகள் | | 3,578,719 |
| 168,877 | பாதுகாப்பு சேவைகள் கட்டணங்களுக்கான ஒதுக்கீடுகள் | | - |
| 21,412,213 | | | 22,783,178 |

| | தொழில்பாட்டு வருமானம் | | குறிப்பு 11 |
|---|---|---|---|
| 1,064,403 | சேவைக்கட்டண வருமானம் | அட்டவணை 10 | 857,073 |
| 23,607,030 | கூட்டாட்சி ஆதனங்களுக்கான சான்றிதழ் வருமா-னம் | அட்டவணை 11 | 46,384,269 |
| 7,283,422 | பழுதுபார்த்தல், பராமரிப்பு வருமானம் | அட்டவணை 12 | 6,817,808 |
| 907,375 | பிரதீபா மண்டபங்களின் வருமானம் | | - |
| 594,907 | நானாவித வருமானம் | அட்டவணை 13 | 2,395,332 |
| 33,457,137 | | | 56,454,482 |

| | தொழில்பாடல்லாத வருமானம் | | குறிப்பு 12 |
|---|---|---|---|
| 105,205 | கேள்விப்படிவ வருமானம் | | 9,000 |
| 318,450 | பதிவுக் கட்டணம் | அட்டவணை 14 | 387,723 |
| 5,580 | அபராதங்களும் ஏனைய அறவீடுகளும் | | 3,200 |
| 126,659 | பணியாளர்கள் கடன் மீதான வட்டி | | 126,636 |
| - | பங்கு இலாபங்கள் | | 150,000 |
| 107,880 | விண்ணப்பப் படிவ கட்டணம் | | 82,000 |
| 230,075 | மத்தியஸ்த கட்டணம் | | 168,000 |
| - | கருத்தரங்கு வருமானம் | | 157,090 |
| 12,444 | கு.மு.ஆ பரசுர வருமானம் | | 14,825 |
| 456,986 | நிலையான வைப்புக்கான வட்டி | | - |
| 133,810 | சேமிப்புக்கான வட்டி | | 28,044 |
| 188,050 | கு.மு அ சஞ்சிகை வருமானம் | | 30,350 |
| 3,487,944 | நிலையான ஆதன விற்பனை இலாபம் | அட்டவணை 15 | - |
| - | ஏழு நாள் சேமிப்புக்கான வட்டி | | 211,918 |
| 5,173,083 | | | 1,368,786 |

| | பணியாளர் வேதனங்களும் கொடுப்பனவுகளும் | குறிப்பு 13 |
|---|---|---|
| 360,000 | தவிசாளர் கொடுப்பனவு | 350,000 |
| 440,000 | தவிசாளருக்கான வதிவிட கொடுப்பனவு | 285,000 |
| 27,894,219 | சம்பளமும் கொடுப்பனவுகளும் | 25,281,626 |
| 2,474,518 | ஊ.சே.நி | 2,370,149 |
| 618,993 | ஊ.ந.பொ.நி | 593,817 |
| 5,838,721 | மேலதிக நேரமும் லீவு நாள் கொடுப்பனவும் | 6,763,607 |
| 91,000 | போனஸ் கொடுப்பனவு | 518,983 |
| 409,500 | ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் | - |
| - | பணிக்கொடை | 1,842,520 |
| 110,000 | பணிப்பாளர் சபை கொடுப்பனவுகள் | 75,000 |
| 50,000 | பணியாளர் நட்டஈடு | - |
| - | சுகாதார தீங்கு மற்றும் சிரமங்கள் | 5,000 |
| - | பணியாளர் நலனோம்புகை | 90,420 |
| 38,286,951 | | 38,176,122 |

| | வழங்கலும் நுகர்வுப் பொருட்களும் | குறிப்பு 14 |
|---|---|---|
| 655,884 | அச்சுப் பணிகளும் எழுதுகருவிகளும் | 671,389 |
| 572,148 | தேநீர்ச் செலவுகள் | 614,598 |
| 1,116,600 | மோட்டார் வாகன எரிபொருள் | 1,073,094 |
| 352,000 | எரிபொருள் கொடுப்பனவு | 439,000 |
| 116,063 | அலுவலக வழங்கல்கள் | 249,375 |
| - | மென்பொருள் கொள்வனவு | 49,000 |
| - | இணைய வசதிகளை பெறுவதற்கான கட்டணம் | 58,080 |
| 2,812,695 | | 3,154,536 |

| | பராமரிப்பு | குறிப்பு 15 |
|---|---|---|
| 1,657,071 | வாகன திருத்த வேலைகளும் பராமரிப்பும் | 2,414,181 |
| 120,743 | கணனி திருத்த வேலைகளம் பராமரிப்பும் | 111,474 |
| 235,668 | கதிர்காமம் சுற்றுலா விடுதி பராமரிப்பு | 289,175 |
| 289,018 | தளபாடங்கள், பொருத்திகள், இயந்திர உபகரண பராமரிப்பு | 246,951 |
| 465,473 | அலுவலக கட்டட பராமரிப்பு | 1,590,414 |
| 115,193 | அலுவலக பராமரிப்பு | 110,715 |
| 2,883,166 | | 4,762,910 |

| | ஒப்பந்தச் சேவைகள் | குறிப்பு 16 |
|---|---|---|
| 508,164 | மின்சாரம் | 387,791 |
| 864,149 | தொலைபேசி | 936.917 |
| 260,052 | காப்புறுதி | 218,753 |
| 233,243 | நீர் பட்டியல் | 244,028 |
| 57,415 | வாகன உரிமப்பத்திர கட்டணம் | 57,464 |
| 68,310 | தபால், தந்திக் கட்டணம் | 96,481 |
| 28,154 | சட்ட ஆலோசனைக் கட்டணம் | 18,850 |
| 29,700 | விளம்பரக் கட்டணம் | 174,468 |
| 30,993 | காப்புறுதியில் உள்ள பணம் | 30,406 |
| 500,646 | பிரசார செலவுகள் | 3,080 |
| - | வரி | 161,806 |
| 58,405 | பத்திதிரிகைகள் | 61,775 |
| 307,440 | அலுவலக வாடகைகள் | 307,440 |
| 109,020 | மொழிபெயர்ப்புக் கட்டணம் | 51,851 |
| 329,500 | மத்தியஸ்த கட்டணம் | 319,425 |
| 3,415,191 | | 3,070,535 |

| | கருத்திட்டங்கள் நேரடி செலவுகள் | | குறிப்பு 17 |
|---|---|---|---|
| 176,000 | சான்றிதழ் வழங்கல் செலவு | | 250,290 |
| 409,353 | பராமரிப்பு மற்றும் திருத்த வேலை செலவு | அட்டவணை 16 | 339,470 |
| 257,245 | பீரதீபா மண்டப செலவு | | - |
| - | அனுமதியற்ற கட்டுமானங்களை அப்புறப்படுத்தல் | | 2,100 |
| 842,598 | | | 591,860 |

| | நிதிச் செலவுகள் | குறிப்பு 18 |
|---|---|---|
| 275,000 | கணக்காய்வுக் கட்டணங்கள் | 275,000 |
| 8,956 | பற்று வரி | 7,822 |
| 3,850 | வங்கிக் கட்டணங்கள் | 395 |
| 6,000 | கொள்வனவுச் செலவுகள் | 6,000 |
| 25,000 | வருமான வரி | - |
| 243,877 | பொருளாதார சேவைகள் கட்டணங்கள் | 413,135 |
| 392,887 | அ.மு.கடன்கள் ஐயக்கடன்கள் | 556,744 |
| 211 | களஞ்சிய சீராக்கல்கள் | 6,618 |
| 63,171 | உழைப்பு வரி | 92,825 |
| 1,018,952 | | 1,358,539 |

| | தொழிபாடல்லாத செலவுகள் | குறிப்பு 19 |
|---|---|---|
| 54,080 | தவிசாளரை சந்திக்க வருவோருக்கான விருந்தோமபல் செலவு | 55,468 |
| 34,749 | நாணாவித செலவுகள் | 89,733 |
| 271,200 | கூட்டாட்சி சஞ்சிகை செலவுகள் | - |
| - | தேசத்துக்கு மகுடம் கண்காட்சி | 250,000 |
| - | உலக குடியிருப்பு தின கொண்டாட்டங்கள் | 297,677 |
| - | கருத்தரங்கு செலவுகள் | 143,025 |
| - | நகமு புரவர | 8,150 |
| 360,029 | | 844,053 |

| | நானாவித வைப்புகள் | அட்டவணை 1 |
|---|---|---|
| 52,120 | பணியாற்றொகுதி பாதுகாப்பு வைப்பு முதலீடு | 75,655 |
| 100,000 | எரிபொருள் வைப்பு | 100,000 |
| | கொள்வனவு வைப்புகள் | 5,000 |
| | ரெலிகொம் வைப்பு | |
| 69,479 | மின்சார வழங்கல கட்டணங்கள் | 69,479 |
| | லங்கா ஒக்சிஜன் சிலிண்டர்களுக்கான வைப்பு | |
| | ՝தபால் முத்திரைக் கருவிக்கான வைப்பு | |
| | பிரதீபா மண்டங்களை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பான க.பொ.கூ | |
| 221,599 | | 250,134 |

| | கடன்பட்டோர் | அட்டவணை 2 |
|---|---|---|
| 443,331 | மாதிவெல பாராளுமன்ற செயலகம் | 502,513 |
| 1,722,027 | உடுமுல்ல புராதன விஹாரை | 1,722,027 |
| 1,447,351 | .கம்பஹா மருத்துவமனை | 1,170,295 |
| 807,187 | லங்கா கெட் (தனி) நிறுவனம் | 807,187 |
| 881,465 | வனசீவராசிகள் திணைக்களம் | 881,465 |
| 198,129 | வாகனத் தரிப்பிடம் (மாளிகாவத்தை) | 189,129 |
| 283,943 | தேசிய இயந்திர பொறித்தொகுதிகள் நிறுவகம் | - |
